நீதிமன்றத்திலிருந்து செயற்குறிப்பு பெறப்படும்பட்சத்தில், நீதிமன்றம் அமைப்பது குறித்து அரசு அளவில் பரிசீலனை செய்து, முடிவெடுக்கப்பட்டு, அரசாணை வெளியிடப்படும்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியுள்ளபடி, மணப்பாறையில் சார்பு நீதிமன்றம் அமைக்க உயர் நீதிமன்றத்திலிருந்து செயற்குறிப்பு பெறப்படும்பட்சத்தில், தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு கனிவுடன் பரிசீலனை செய்யும். அதேபோல, நீதிமன்றம் கட்டுவதற்கு கூடுதல் நிதி வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிக்கை வைத்தார்கள். அதுவும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கனிவான பார்வைக்குக் கொண்டுசெல்லப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 203, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. குமரகுரு, மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

203—

கால்நடை மருத்துவமனை

***6874—திரு. இரா. குமரகுரு:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உளுந்தூர்பேட்டை தொகுதி, திருவெண்ணெய்நல்லூர் ஊராட்சி ஒன்றியம், பெரியசெவலை கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

முற்பகல் 10-35

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உளுந்தூர்பேட்டை தொகுதி, பெரியசெவலை கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். முதலில் ஒரு கால்நடை கிளை நிலையம் அமைக்கப்பட வேண்டும் என்று சொன்னால்,

அங்கே 3,000 கால்நடை அலகுகள் இருக்க வேண்டும் என்ற விதி இருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகின்ற அந்தக் கிராமத்தில் 5,000 கால்நடை அலகுகள் இருக்கின்ற காரணத்தினால், மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணையினைப் பெற்று, வருகின்ற 2015-2016 நிதியாண்டில் அங்கே ஒரு கால்நடை கிளை நிலையம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்களின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. குமரகுரு அவர்கள்.*

திரு. இரா. குமரகுரு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கழகத்தின் நிரந்தரப் பொதுச் செயலாளர், தமிழகத்தின் நிரந்தர முதல்வர், மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதங்களை வணங்குகிறேன், பெரியசெவலை கிராமத்தில் புதிய கால்நடை கிளை நிலையம் அமைக்கப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை அறிவிக்கச் செய்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் தொகுதி மக்களின் சார்பாகவும், என் சார்பாகவும் நன்றியினைத் தெரிவித்துக்கொண்டு, அமர்கிறேன். நன்றி, வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 204, மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

204—

நெசவாளர்களுக்கு வீடுகள்

***61895—திரு. ம. குணசேகரன்:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதியிலுள்ள கைத்தறி நெசவாளர்களுக்கு வீடுகள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*